**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன்,பி.எல்.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்**

**2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் மார்கழி மாதம் 22ம் தேதி)**

**I.A.No.4/2024 in O.S.No.179/2023**

**CNR.No.TNNM01-001646-2023**

பெரியசாமி ......மனுதாரர்/வாதி

/எதிராக/

பொன்னுசாமி .......எதிர்மனுதாரர்<br>/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 02.01.2025ம் தேதி கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பெரியசாமி அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.கிருஷ்ணப்பன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

1) பிரதிவாதி நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகி அவருடைய இடதுகை பெருவிரல் ரேகையை நீதிமன்றத்தின் முன்பாக பதிவு செய்யவும், அவ்வாறு நீதிமன்றத்தார் முன்னிலையில் எடுத்த பிரதிவாதியின் இடதுகை பெருவிரல் ரேகையையும், தாவா புரோநோட்டுகளில் உள்ள பிரச்சனைக்குரிய பிரதிவாதியின் கைரேகையையும் ஒப்பிட்டு பார்த்து கைரேகை பரிசோதனை நிபுணரின் அறிக்கையை பெற மேற்படி அசல் வழக்கில் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து ஆணையர் மூலமாக அனுப்பி வைத்து அறிக்கை பெற உத்திரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 45 சி.பு.கோ.பிரிவு 151 மற்றும் கட்டளை 26 விதி 10(பி) ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. இவ்வழக்கானது தாவா பிராமிசரி நோட்டின் பேரில் தாவா தொகை கிடைக்கக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியிடம் இந்த பிரதிவாதி கடந்த 24.12.2022 தேதியில் எந்தவித பிராமிசரி நோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், 24.12.2022 தேதியில் பிரதிவாதி நாமக்கல் மாவட்டத்திலேயே இல்லை என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை பிரதிவாதியுடையது என நிரூபணம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கூறி அவருடைய இடதுகை பெருவிரல் ரேகையை எடுத்து அதனை தாவா புரோநோட்டுகளில் உள்ள பிரச்சனைக்குரிய கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை பெற கைரேகை பரிசோதனை நிபுணருக்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற்று வழக்கை நடத்த வேண்டியுள்ளது. இல்லாதபட்சத்தல் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படும். ஆகவே பிரதிவாதி நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகி அவருடைய கைரேகையை நீதிமன்றத்தின் முன்பாக பதிவு செய்யவும், அவ்வாறு நீதிமன்றத்தார் முன்னிலையில் எடுத்த பிரதிவாதியின் கைரேகையையும், தாவா புரோநோட்டுகளில் உள்ள பிரச்சனைக்குரிய பிரதிவாதியின் கைரேகையையும் ஒப்பிட்டு பார்த்து கைரேகை பரிசோதனை நிபுணரின் அறிக்கையை பெற மேற்படி அசல் வழக்கில் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து ஆணையர் மூலமாக அனுப்பி வைத்து அறிக்கை பெற உத்திரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3**<u>) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடியாகத்தக்கது. இந்த வழக்கானது ஒரே ஒரு பிராமிசரி நோட்டை மட்டும் தாக்கல் செய்துவிட்டு மிக்பெரிய தொகையான ரூ.10,00,000/– கடனாக கொடுத்துள்ளதாகவும், அதற்கான வட்டியை சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த பிரதிவாதி முறையாக

எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். தாவா பிராமிசரி நோட்டு குறித்து அதிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை குறித்து தனது சந்தேகத்தை பிரதிவாதி எழுப்பியுள்ள நிலையில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவிற்கு யாதொரு வியாஜ்ஜிய மூலமும் இல்லை. தாவா பிராமிசரி நோட்டு எழுதப்பட்ட விவரத்தையும், பணம் கைமாறிய விவரங்களையும் மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். அதனை பிரதிவாதி மீது சுமத்த இயலாது. இம்மனுவிற்கான நேரம் இதுவல்ல. வழக்கின் விசாரணையின்போது வழக்கின் போக்கை தெரிந்துகொண்டு இவ்வாறான மனுவிற்கு அனுமதி வழங்கிட வேண்டும். ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

**4) மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை.**

5) **மனுதாரர்/வாதி மனுவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்யவேண்டியுள்ளது**.

தீர்வு–

மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, வாதியிடம் பிரதிவாதி கடந்த 24.12.2022 அன்று தாவா பிராமிசரி நோட்டின் அடிப்படையில் ரூ.10,00,000/–ம் கடனாக பெற்றிருந்தார். மேற்படி கடனை பிரதிவாதி பைசல் செய்யாததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வாதியிடம் இந்த பிரதிவாதி யாதொரு கடனும் பெறவில்லை என்றும், தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பங்கள் மற்றும் கைரேகைகள் இந்த பிரதிவாதியினுடையது அல்ல என குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே பிரதிவாதியிடமிருந்து இந்நீதிமன்றத்தில் அவருடைய இடது கை பெருவிரல் ரேகையை பெற்று தாவா பிராமிசரி நோட்டில் உள்ள பிரச்சனைக்குரிய இடது கை பெருவிரல் ரேகைகளுடன் ஒப்பிட்டு பார்த்து தடய அறிவியல் துறை நிபுணரின் அறிக்கை பெறுவதும், அவ்வாறு அறிக்கை பெற நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதும் இவ்வழக்கிற்கு மிகவும் முக்கியமானது என்பதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

6) எதிர்மனுதாரர் தரப்பில், வாதியிடம் இந்த பிரதிவாதி யாதொரு தொகையும் கடனாக பெறவில்லை. தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பங்கள் மற்றும் கைரேகைகள் இந்த பிரதிவாதியினுடையது அல்ல. தாவா பிராமிசரி நோட்டு போர்ஜரியானவை. இந்த பிரதிவாதியின் நிலத்தை வாதியை சார்ந்தவர்களுக்கு கிரையம் கொடுக்குமாறு வாதியும் மற்றும் சிலரும் பலமுறை கேட்டுள்ளனர். அதற்கு பிரதிவாதி விருப்பமில்லை என கூறியுள்ளார். அதனால் முருகேசன் என்பவரின் தூண்டுதலினால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் குடும்பத்திற்கு எதிராக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது ஜோடிக்கப்பட்ட வழக்காகும். ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

7) அசல் வழக்கானது தாவா பிராமிசரி நோட்டின் அடிப்படையில் தாவா தொகைக்கும், பின் வட்டி மற்றும் செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில், தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பங்கள் மற்றும் கைரேகைகள் இந்த பிரதிவாதியினுடையது அல்ல என குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளதால் பிரதிவாதியிடமிருந்து திறந்த நீதிமன்றத்தில் இடது கை பெருவிரல் ரேகையை பெற்று தாவா பிராமிசரி நோட்டில் உள்ள பிரச்சனைக்குரிய ரேகைகளை ஒப்பிட்டு பார்த்து நிபுணரின் அறிக்கை பெற இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கையொப்பம் மற்றும் கைரேகை பிரதிவாதியினுடையதல்ல என மறுத்து எதிர்வழக்காடப்படுகிறது என்பது தெரிய வருகிறது. மேலும் வாதியிடம் இந்த பிரதிவாதி எந்தவொரு காலத்திலும் யாதொரு தொகையும் கடனாக பெற்றுக்கொண்டு தாவா பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுக்கவில்லை என குறிப்பிட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வழக்காடப்படுகிறது. ஆகவே வாதிதரப்பு வழக்கை நிரூபணம் செய்ய தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை பிரதிவாதியினுடையதுதான் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதியின் கைரேகையை தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்து கைரேகை நிபுணரின்

அறிக்கை பெற கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா பிராமிசரி நோட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல என குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளதால் தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை இந்த பிரதிவாதியினுடையதா என்பதை தீர்மானிப்பது அசல் வழக்கில் பிரச்சனைக்குரிய சங்கதிகளை தீர்மானிக்க அவசியமானதாக உள்ளது. இம்மனு அனுமதிக்கப்பட்டு கைரேகை நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பப்படுவதால் வழக்கின் உண்மை நிலையை தெரிந்து கொள்ளும் நிலை ஏற்படும். இது இருதரப்பினர்களின் வாய்மொழி சாட்சியத்தையும் வெகுவாக குறைக்கவும், தாவா பிராமிசரி நோட்டு பற்றிய உண்மை தன்மையை அறிந்துகொள்ளவும் இந்நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும். ஆகவே அசல் வழக்கை தீர்மானிக்க தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை பிரதிவாதியினுடையதா என்பதை தீர்மானிப்பது அவசியமானதாக உள்ளதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

8) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.கே.மனோகரன் அவர்கள் நியமிக்கப்படுகிறார். தாவா பிராமிசரி நோட்டையும், ஒப்புக்கொள்ளப்பட்ட பிரதிவாதியின் கைரேகையையும் சென்னை தடய அறிவியல் துறை நிபுணர் பரிசோதனை செய்து அறிக்கை வழங்க ஏதுவாக மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்திலிருந்து மூடி முத்திரையிட்ட தபால் உறை மூலம் நீதிமன்ற ஆணையர் பெற்று சென்று அதனை சென்னை தடய அறிவியல் துறையில் ஒப்படைத்து பின்னர் மீண்டும் மேற்படி ஆவணங்களையும், நிபுணரின் அறிக்கையையும் பெற்று வந்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியம் ரூ.12,000/—ம் என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக வழங்க வேண்டுமென்றும், தடய அறிவியல் துறை நிபுணர் மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்வதற்கான கட்டணத்தை மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையர் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் செலுத்த வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது. அழைக்க 20.01.2025.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06ம் நாள் என்னால் அவையறிய உத்திரவு பகரப்படுகிறது.

Sd/- S.Prabha Chandran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

Sd/- S.Prabha Chandran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.